# உணர்வை இழக்கும் மானுடம்



விஷ்வமித்திரன்

# உணர்வை இழக்கும் மானுடம்...

(கவிதைத் தொகுப்பு)

விஷ்வமித்திரன்

வெளியீடு

வானவில் வெளியீட்டகம்

## நூல் விபரப் பட்டியல்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : உணர்வை இழக்கும் மானுடம் |
| நூல் வகை | : கவிதைத் தொகுப்பு |
| நூலாசிரியர் | : விஷ்வமித்திரன் |
| விலாசம் | : சு.சி. அரவிந்தன்<br>24/1 இராஜவரோதயம் வீதி,<br>திருக்கோணமலை.<br>தொ.பே: 026-2225345 |
| பக்கங்கள் | : 92 |
| தாளின் வகை | : 70 Gsm Bank |
| வெளியீடு | : 2005 |
| பதிப்பகம் | : ரெயின்போ மினிலாப் (பிரிஇ) லிமிடட்<br>திருக்கோணமலை. இலங்கை.<br>தொ.பே: 026-2227498, 2227354 |
| வெளியீட்டகம் | : ஹினுவில் வெளியீட்டகம்<br>361A, நீதிமன்ற வீதி,<br>திருக்கோணமலை. 0712340194 |
| விலை | : ரூபா 100.00 |
| **ISBN** | **: 955-1098-03-X** |

# உள்ளடக்கம்


| இல. | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | எங்கிருந்தோ என் குரல் கேட்பாயா? | 13 |
| 2. | இளவேனில் | 16 |
| 3. | ஜீவகாருண்யம் | 17 |
| 4. | தனிவழி போனவன் | 19 |
| 5. | விடியல் | 20 |
| 6 | உணர்வை இழக்கும் மானுடம் | 21 |
| 7. | மூளும் மேகத் திரள் | 23 |
| 8. | உதயகாலம் | 24 |
| 9. | பற்றி ஏறிப் பரவுங்கள் | 25 |
| 10. | தொங்கும் பூந்தோட்டம் | 27 |
| 11. | இருவேறு உலகங்கள் | 28 |
| 12. | புலம் பெயர்ந்த தமிழினமே | 29 |
| 13. | வசந்தம் | 30 |
| 14. | ஒரு கவிதை கலைகிறது | 32 |
| 15. | மோகன கீதம் | 35 |
| 16 | காலங்கடந்தவன் | 37 |
| 17. | இதயமே வேண்டாம் | 37 |
| 18. | ஒரு பிறந்ததின வாழ்த்து | 38 |
| 19. | உறவின் விலை பிரிவு | 39 |
| 20. | நீங்கள் செய்த பாபம் | 40 |
| 21. | துன்பத்தில் இன்பம் | 40 |
| 22. | மாதர் தம்மை | 41 |
| 23. | இலக்கணம் | 45 |
| 24. | ஓர் மெல்லிதயம் | 46 |

| | | |
|---|---|---|
| 25. | சுட்டும் விழிச்சுடர்கள் | 47 |
| 26. | உன் ஆட்சி | 48 |
| 27 | உதிர்ந்த பூக்கள் | 49 |
| 28. | மறைந்த இனிமை | 50 |
| 29. | மறுபிறவி | 51 |
| 30. | பெண்நிலவு | 52 |
| 31. | வானத்தில் ஆயிரம் பூமலரும் | 53 |
| 32. | இலையுதிர்காலம் | 54 |
| 33. | சோலை ஒன்று | 57 |
| 34. | குறிஞ்சிமலர் | 58 |
| 35. | நியதிமாறுமோ | 62 |
| 36. | கனவுகள் நனவாகும் | 63 |
| 37 | இடைப்பாலம் போடுங்கள் | 65 |
| 38. | எதிர்மறை இயல்புகள் | 66 |
| 39. | சின்னச்சின்னக்கண்ணனுக்கு | 67 |
| 40. | ஊர் என்ற தேன்கூடு | 69 |
| 41. | எப்போது இங்கே மழைதூறும் | 70 |
| 42. | கானல் நீர் | 71 |
| 43. | மை தீர்ந்த பேனாவோ.. | 73 |
| 44. | கண்ணீரில் ஒரு கவிதை | 75 |
| 45. | கண்ணீர் உலர்ந்த சுவடுகளில் ஒரு கவிதை | 78 |
| 46. | கன்னியின் கனவு..... | 81 |
| 47. | ஊமை நெஞ்சினிலே | 82 |
| 48. | திசை மறந்த ஓடங்கள் | 84 |
| 49. | ஒன்று சேர்தல் | 85 |
| 50. | ஊரெல்லாம் எரிகிறது | 86 |

# அணிந்துரை
## வென்றுயர்க!

1. திருமலையார் அரவிந்தர்
சீர் 'விஸ்வ மித்திர'னார்
அரும் 'உணர்வை இழுக்கின்ற
அரிய மானுடர்' பற்றி
ஒரு நூல் வரைந்துள்ளார்,
ஒழுங்காய் அது பயின்றேன்!
வரும் - அதனை நீங்களுமே
வடிவாய்ப் பயின்றீரேல்................?

2. இயற்கை எழில் மலர்கள்
இளவேனில் இன்ப துன்பம்
செயற்கை இடைப்பாலம்
சிறு கண்ணன் - தீர்பேனா
நயக்கின்ற கற்பனைகள்
நல்ல தமிழ் - நம் மாதர்......
மயக்கும் கவிதை பல
மன மீர்க்கப் பார்த்திடலாம்!

3. பார்வைப் பொதுமை களாய்ப்.....
பல நல்ல எண்ணத்தின்
கோர்வைகளாய்....... மறைவாகக்
கொள்ளும் உணாவுகளின்
கூர்மைகளாய்க் ..... கட்டுக்கள்
குலையும் சமுதாயத்
தேர்வுக்குரிய பல
தேடல்களாய்ப் பார்த்திடலாம்!

4. ஒன்றுபடல் ஊர்காத்தல்
ஊமைநிலை மாறுபட
நன்று செயலாற்றல்
நல்லுறவை மேம்படுத்தல்....
என்ற வா றோடி வரும்
இனிய கவி நூல் தந்தார்,
வென்றுயர வாழ்த்துகிறேன்
'விடியல்' எதிர் பார்க்கின்றேன்!

**'தாமரைத்தீவான்'**

# பதிப்புரை

தமது படைப்புக்களை நூல்களாக்கி வெளியிட்டு இலக்கியத்துறையில் சாதனை படைக்க வேண்டிய படைப்பாளிகள், சந்தைப்படுத்தல் என்னும் பெரும் பிரச்சினைக்கு முகங்கொடுக்க முடியாத நிலையில் தம் முயற்சியில் பின்னிற்கும் நிலையை மாற்ற எம்மால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் பிரச்சனையைத் தீர்க்கக் கூடிய, ஊக்குவிப்புத் திட்டத்தின் மூன்றாவது வெளியீடாக விஷ்வமித்திரன் என்ற புனைப்பெயரில் திரு. எஸ்.எஸ். அரவிந்தன் அவர்கள் எழுதிய "உணர்வை இழக்கும் மானுடம்" எனும் இந்நூல் வெளிவருகின்றது.

இந்நூல் ''அடிமனதில் வருடி நெருடல்களை ஆங்காங்கே இடித்துரைத்து இயல்பு மாறாமல் எடுத்துரைக்கும் வகையில் கவிஞரால் புனையப்பட்ட ஐம்பது கவிதைகளின் தொகுப்பாகும்.

திரு.எஸ்.எஸ். அரவிந்தன் அவர்களின் உயர்ந்த கொள்கைகளும் அவற்றை மற்றவர்களும் உணர்ந்துகொள்ள வேண்டுமென்ற ஏக்கமும் இழையோடி இருக்கும் இக்கவிதைகள் மூலம் மனித விழுமியங்கள் மலியப்பார்த்தல் எனும் தனது எதிர்பார்ப்பை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள முற்பட்டிருக்கும் இவரது முயற்சியும் துணிவும் பாராட்டுக்குரியதாகும்.

இந்நூல் முழுமையாக எமது ஊக்குவிப்புத் திட்டத்திற்கமைய வெளிவந்துள்ளது. இத்தகைய எமது ஊக்குவிப்புத் திட்டத்திற்கு ஈழத்தமிழ் வாசகர், படைப்பாளிகள் அனைவரதும் ஊக்குவிப்பும் ஆதரவும் உறுதுணையாக அமைந்து நிற்கும் என்ற நம்பிக்கையோடு எமது மூன்றாவது நூலை உங்கள்முன் சமர்ப்பிக்கின்றோம்.

சி.சிவபாலன்

வி்ஷ்வதில் வெளியீட்டகம்

# என்னுரை

அன்பு நெஞ்சங்களுக்கு....
வெவ்வேறு கால கட்டங்களில்எழுதிய கவிதைகள் ஒன்று சேர்ந்ததால் உருவானது இந்தக் கவிதைத் தொகுப்பு....

எனது பார்வையும் எண்ணங்களின் கோர்வையும் அவற்றி னூடு மறைந்திருக்கும் உணர்வுகளின் கூர்மையும் ஓர் உன்னதமான சமுதாயத்திற்கான தேடல்களே..... இளை ஞர்கள் நெஞ்சங்களில் இந்த சமுதாய உணர்வுகள் பிரதிபலிக்க வண்டும் என்பது என் வேணவா.

மனசின் மென்மையுணர்வுப் பின்னல்கள் சில கவிதைகளாகி இடையிடையே இதம் சேர்க்கின்றன..

இக்கவிதைகள் நூலுருவாகி அரங்கேறும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவற்றுக்கு காரண கர்த்தாவாக இருந்தவர் களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

- கவிதையுணர்வை தோற்றுவித்த பெற்றோர்

- தமிழ் இசக்கண இலக்கியங்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள்

- வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தியவர்கள்

- கவிதை எழுதத் தூண்டியவர்கள், ரசித்தவர்கள்

- "கவிதை எழுதித் தாருங்கள் திருத்தித் தருகிறேன்" எனக்கூறி கவிதைக்கு என்னை அறிமுகம் செய்த காலம் சென்ற புலவர் திரு. பொன் சிவசேகரனார்....

♦ சிதறிக்கிடந்த கவிதைகளை ஒன்று சேர்த்து யாலையாக்கி அழகு பார்க்கும் ஆசை எனக்கு சிலகாலமாய் அடிக்கடி வந்தது. அப்போதுதான் திரு. சித்தி அமரசிங்கம் ஐயாவின் அறிமுகம் கிடைத்தது. அவரது அறிவுரைகளும் அன்புடன் கலையுள்ளங்களை ஆதரிக்கும் தன்மையும் வியக்கவைத்தன. நம்பிக்கையூட்டின. அவர் தந்த ஆதரவு ஒன்றே இந்த முயற்சிக்கு வித்தாகியது. என் மனம்கனிந்த நன்றி என்றென்றும் அவர்க்குண்டு.

♦ இக் கவிதைத் தொகுப்புக்கு தனது நேரத்தை ஒதுக்கி அழகிய அர்த்தபூர்வமான கவிதைமூலம் அணிந்துரை வழங்கி ஆசி நல்கிய மாபெரும் கவிஞர் தாமரைத்துவான் ஐயா அவர்கள் இவர் உள்ளத்தால் உயர்ந்த குருவாக காட்சியளிக்கிறார். அவர் அன்புக்கு எனது பணிவான நன்றி.

♦ கவிதைத்தொகுப்பின் மாதிரி பிரதியை சரி பார்ப்பதற்கு உதவிய திருமதி.வசந்தி அவர்களுக்கும் என் மனங்கனிந்த நன்றி.

♦ கவிதைத் தொகுப்பை அழகுற அச்சேற்றி மிக் குறுகிய காலத்தில் வெளியிட உதவியது மட்டுமன்றி இதனை வெறும் தொழிலாகக் கருதாமல் கலைத்துவத்துடனும் கலைஞரை வளர்க்கும் நல்லெண்ணத்துடனும் செயல்படும் ரெயின்போ நிறுவனத்தினருக்கு என் மனம்கனிந்த நன்றிகள்.

♦ அட்டைப்படத்தை உயித்துவமாய் வரைந்து நூலை அழகு றச்செய்த மகன் செந்தூரன்.

◆ இவர்களுக்கு புறம்பாக கவிதைகளின் கரு உருவாக காரணதாயிருந்த நிகழ்வுகள் மனிதர்கள் இயற்கைத் தோற்றங்கள் ரசித்து மகிழ்ந்து ஊக்குவித்தவர்கள் ஊர்ந்து செல்லும் எறும்புகள் உயரப் பறக்கும் குருவிகள் பாய்ந்து செல்லும் அருவிகள் அனைவரும்-அனைத்தும் நன்றியுடன் நினைவு கூரப்படுகின்றனர் நினைவுகூரப்படுகின்றன.

இறுதியாக இம்முயற்சிக்கு பின்னணியில் இருந்து முகம் காட்டாது உதவிபுரியும் நண்பர்களும் நலன் விரும்பிகளும் என் குடும்பத்தினரும் இதயம் கனிந்த நன்றியை ஏற்றுக் கொள்வார்களாக.

நன்றியுடன்

"விஷ்வமித்திரன்".

சு.சி.அரவிந்தன்
24/1 இராஜவரோதயம் வீதி
திருகோணமலை.
தொ.பே : 026-2225345



# சமர்ப்பணம்



என்னை அருந்தவம் செய்து பெற்றதாக
எண்ணி சீராட்டி வளர்த்து அன்பையும்
மனிதநேயத்தையும் தேடும் இதயத்தை தந்த
பெற்றோர்க்கும்!

அன்பின் மற்றோர் வடிவமான உயிர்
நட்பால் என் இதயம் கொள்ளைகொண்டு
மறைந்தும் மறையாது நெஞ்சுக்குள் என்றும்
வாழும் ஆருயிர் நண்பன்
கிருபாகரனுக்கும்......

**இந்நூல் படையலாகட்டும்**



# எங்கிருந்தோ என் குரல் கேட்பாயா..?



எங்கோ நானிருந்தேன்-
எரிதணலின் மத்தியிலே....
ஏகாந்த வெறுமையிலே....

*

எனைப்பார்த்து ஆதரவாய்
"இங்கே வா- வந்தால்
நீ உயரத் தோள் தருவேன்"
என்றாய்....

*

வள்ளுவன் வகுத்த
நட்பின் இலக்கணமே
நீயாகி நின்றாய்...

*

மலைபோல் மனத்துணிவு..
கடல்போல் மனக் கனிவு..
இரண்டு எதிர்மறையும்
ஒன்றாகி நின்றது
உன்னிடத்தில்தான்.....

*

இங்கு வந்தேன்..
உன் நட்பெனும் ஆற்றில்
நினைத்தபோதெல்லாம்
நீந்திக்களித்தேன்..
மழைபட்ட மரம்போல்
மறுபடி துளிர்த்தேன்..

*

நினைக்கவேயில்லை...
ஒருநாள்
நீயில்லாத உலகத்தும்
வாழ நேரிடும் என்று....
*

சக்தியின்
முழுமை உருவாக
உனைக்கண்டேன்
உடலால் மட்டுமன்றி
உள்ளத்தாலும்..
*



நீ தானா
எம்மை
நட்டாற்றில் விட்டு
தொலைதூரம் சென்றது..?
நியாயமாடா
இது உனக்கே....?
*

அன்பின்
அத்தனை வகையும்
உன் ஒருவனிடம்
தஞ்சம் புகுந்ததனால்
'கிருபா' என்ற பெயர்
உனக்கே அமைந்ததெனில்
பெருமை உனக்கல்ல-
உன்னால் பெருமை
அப்பெயருக்கே...
*

வாழ்வெனும் மாயத்தை
உன் இழப்பின் போதுதான்
எல்லோரும்
முழுமையாகப்
புரிந்துகொண்டனர்...

*

கடமை புரிகையிலே-
செயல் வீரன்..
அதுமுடிந்து
குலவிச் சிரிக்கையிலே
குறும்புக்காரன்..

*

நவரசத் திலகம் சிவாஜியை
நினைவு படுத்துவாயாம்- உன்
இதமான பாவனைகளில்.

*

உன் கனவுகள்
உன் ஆசைகள்
இவையெல்லாம்
வெறுமே
கனவாகிப்போகாமல்
நிஜமாகும்..
ஏனென்றால் - நீ
உனக்காய் மட்டும்
வாழவில்லை..
இந்த உலகுக்காகவும்
வாழ்ந்தவன்...
எங்கிருந்தோ என் குரல்
கேட்பாயா.....

******

## இளவேனில்

இருட்டில் ஒளியாய்
இருந்த என்மனம்...
வயிறு காய்ந்தபோதும்
மனம்
பசுமையாகவே இருந்தது..
இன்றென்ன வந்தது
இதற்கு.....?

உலர்ந்து கருகி
சருகாகி.
உதிரும் நிலையில்.
என்ன இது...?

மழைத்துளியே
என்மீது
கருணை காட்ட மாட்டாயோ
மற்றுமொரு இளவேனில்
எனக்குள்
எட்டி நடைபயில...?



உதிர்ந்த சருகுகள்
தளிராக
மந்திரம் ஒன்று கூறேன் ...

# ஜீவகாருண்யம்

பூவிருந்தால் மணமிருக்கும்
நீர் இருந்தால் நிலமிருக்கும்
தீ இருந்தால் புகையிருக்கும்
மனமிருந்தால் கனிவிருக்கும்

உலகிருந்தால் உயிரிருக்கும்
உயிர்களிடம் உணர்விருக்கும
உயிர்களதன் உணர்வுகளை
உணர்பவர்தான் உத்தமர்கள்

சுற்றிவரப் பாருங்கள்
நாம் மட்டும் தனித்தில்லை
அடுத்தவர்கள் அடுத்தஉயிர்
இருப்பதற்கும் இடம்கொடுங்கள்



எம்வயிற்றுப் பசிப்பிணியே
எல்லோர்க்கும் இருப்பதென்று
எண்ணத்தில் தோன்றாதோர்
எத்தனையோகோடியுள்ளார்.

அங்காடிச் சந்தையிலே
ஆங்காங்கே பொருளிருக்க
அத்தனையும் வாங்கிவிட
ஆசையுடன் பலர் நினைப்பார்

இப்படித்தான் அன்றொருநாள்
என்குழந்தை எனைக்கேட்டாள்
அத்தனையும் வாங்குகிறீர்
அடுத்தவர்க்கு ஏதுபொருள்?

அக்கணத்தில் மின்னலைப்போல்
இவ்வுண்மை புரிந்துகொண்டேன்
மற்றவர்க்கும் மீதிவைத்தே
எப்பொருட்கும் உரிமைகொள்வோம்

உயிர்களென்றால் மனிதனில்லை
எவ்வுயிரும் உயிரதுவே
எவ்வுயிர்க்கும் உணர்வு உண்டு
துன்பமுண்டு சோகமுண்டு


அன்பேதான் கடவுளென்பார்
ஆலயங்கள் தொழுதெழுவார்
துன்பமுறும் ஏழைகண்டு
துளியேனும் இரக்கமுறார்

வெளிவேஷம் போடாதீர்
வீண்வார்த்தை பசப்பாதீர்
ஒளிந்துள்ள மனசிற்குள்
ஒளித்தீபம் ஏற்றுங்கள்....



பூவான மனமெங்கும்
பூவாசம் வீசட்டும்
ஜீவகாருண்யத்தால்
ஜீவன்கள் சிலிர்க்கட்டும்......

## தனிவழி போனவன்..



சுடரும் எண்ணத்தில்
வண்ணங்கள் தீட்டாமல்
தனியே விட்டேன்..
அவையின்று
சொல்லாது எங்கோ
தொலைதூரம்
சென்று மறைந்தன..

ஒவ்வொரு எண்ணத்துளிக்கும்
ஓர் வண்ணப் பொட்டிட்டு
உலவ விட்டிருந்தால்
தமிழ் உலகம் என்னைத்
தட்டிக் கொடுத்திருக்குமா.?

தனியே
கால்போன போக்கில்
வழிதேடியவன்
பெருந்தெருவைத் தொடுவதும்
சாத்தியமா...?

முயல்கிறேன் இன்றிருந்து....
முடியுமா பார்க்கிறேன்...

# விடியல்...



அன்று பலநாட்கள்
எழுதிவைத்த கவிதைகள் போல்
இன்று புதிதாக
எழுதிவைக்க ஏதுமில்லை..

சென்ற காலத்திடம்
சிந்தையினைக் கொடுத்திருக்க
அந்த நினைவுகளே
அழைத்துச்செல்லும் ஆசையுடன்..

முற்றிப் பழுத்திருக்கும்
மனப்பழமும் காயுமுன்னே
கற்ற கல்வியெல்லாம்
கவிக்கடலாய் ஆகாதோ...?

வாழ்க்கைப் புத்தகத்தில்
வரைந்ததுவும் வாசித்ததும்
யார்க்கும் உதவாமல்
மறைந்திடுமோ என்னுடனே..

சொல்லப் பலவுளது..
சொல்லிவைக்க நினைவுளது
கொல்லும் துன்பவலை
கொஞ்சமெனை விலக்கிடுமேல்....

இல்லை இன்பமென
இல்வாழ்வை வெறுத்திருந்தேன்
வெல்லும் உணர்வு கொண்டேன்
விடியல் எனை வரவேற்கும்....

# உணர்வை இழக்கும் மானுடம்.

பூக்கள் விரியும் ஓசைதனை
புள்ளினம் பேசும் பாஷைதனை
ஈக்கள் மனத்தின் ஆசைதனை
எங்கள் புலன்கள் உணர்வதில்லை

அணுவுள் சுழலும் இலத்திரன்கள்
அண்டம் நிறைந்த தாரகைகள்
கணங்கள் நாட்கள் ஒளியாண்டு
கணக்கைத் துணிய முடிகிறது

அண்ணன் தங்கை மனசிற்குள்
அடுத்த வீட்டார் அழுகைக்குள்
முன்னில் சிரிக்கும் குழந்தைக்குள்
முகிழ்க்கும் உணர்வு புரிவதில்லை

உலகம் பிறந்த முதலாண்டு
உடுக்கள் வாழும் முழுஆண்டு
உலவும் வேகம் திணிவு திசை
அனைத்தும் அறியும் ஆற்றலுண்டு

எண்ணம் எங்கே பிறக்கிறது- அது
எதனை அடையத் துடிக்கிறது
துன்பம் விளைக்கும் ஆசையெல்லாம்
தோற்றும் ஊற்று வாய்எதுவோ..?

அடுத்தோர் மனசைக் கீறாத -நல்
ஆசை என்று ஏதுமுண்டோ
படித்தோர் பெரியோர் புகழுடையோர்
பதிலைக் கொஞ்சம் கூறுங்களேன்

உலகை அளக்கும் மானிடர்க்கு-தம்
உள்ளத்தாழம் புரியவில்லை
நிலவைத் தொட்டான் மீண்டுவந்தான்
நினைவை தொடவே முடியவில்லை

அறிவால் வகுத்தான் வாழ்க்கைமுறை
உணர்வால் மீறித் தடம்புரண்டான்
எரிகல் 'ஸ்கைலாப்' திருப்பிவிட்டான்
எரிக்கும் போரால் உலகழித்தான்

பூனைக்குட்டி 'மியா' என்னும்
புரிந்து தாயும் பாலூட்டும்
வானில் மேகம் மூட்டமிடும்
வண்ண மயிலும் ஆட்டமிடும்

உணர்வுப்பின்னல் நாரிழையால்
உயிர்கள் இயக்கம் நிகழுவதை
உணர்வு ஆற்றல் சிதைத்தழிக்கும்
'உயர்ந்த அறிவோன்' அறிவானோ

உலகில் உயர்வாய் வாழ்வதற்காய்
உழைத்தும் ஏய்த்தும் முயன்றிடுவான்
அலையும் மனமோ அமைதியின்றி
ஆழிப் பேரலை யாகிவிடும்....

அறிவாம் வானில் பறந்திடலாம்
அதனால் உயிர்கள் பயனுறுமேல்
பிறரின் உணர்வை மதித்திருந்தால்
பொருளொன்றிருக்கும் வாழ்வினிலே

# மூளும் மேகத் திரள்கள்...




மூளும் மேகத்
திரள்களினோடும்
முல்லைவாடைப்
பூங்கனவோடும்
முன்னொருநாளில்
பின்னிரவொன்றில்...

ஆளத்துடித்த
அந்தநினைவுகள்
ஆகாயத்தில்
அலைந்திடவிட்டே
அழகாய் என்னனைக்
கொள்ளை கொண்டன...

வாழத்துடிக்கும்
இளமைப் பருவம்
வந்தாலேயோர்
வேதனையம்மா
வகையறியாத
குழந்தையாக

மீளத்துடித்தேன்
மனமிரங்காத
இறைவன் அவனை
எப்படி வைவேன்..?
முதுமை உள்ளம்
அழிவது என்று..?



## உதய காலம்.

என்றும் போலவே
இந்த உதயகாலம்
இன்றும் அழகாயிருக்கிறது.

மரங்களுடன்
மலர்களுடன்
சீதளத் தென்றலுடன்
இதயம்
கவிபாஷையில்
சம்பாஷிக்கிறது..

நினைவிருக்கிறதா-
நான் சொன்னேன்..
மாறுதல் என்பது
மரணத்தைப் போன்றதென்று.

நினைவு வருகையில்
மீண்டும் மலர்கின்றன
வேதனைப் பூக்கள்



## பற்றி ஏறிப் பரவுங்கள்...

ஊர்ந்துசெல்லும் எறும்புகள்
உயரப் பறக்கும் குருவிகள்
பாய்ந்து செல்லும் அருவிகள்
படரத்துடிக்கும் இளங்கொடி

கடலில் ஓடும் தோணிகள்
கரையைத் தேடும் நண்டுகள்
சுடரும் கோவில் தீபங்கள்
சுழலும் வானின் கோளங்கள்

மாலை மலரும் மல்லிகை
மயக்கும் மந்த மாருதம்
நீலக்கடலின் நீள்திரை
நிதமும் சுடரும் கதிரவன்

இயற்கை தோற்றம் அனைத்துமே
இயக்கம் இயக்கம் இயக்கமே
மயங்கிப் பொழுது போக்கிட
மறந்தும் நினைப்பதில்லையே

மனிதன் என்ற படைப்பிலே
மகிமைக்கேதும் குறைவில்லை
இனிமை துய்க்க நினைப்பதே
இடருக்கெல்லாம் காரணம்

ஓய்விலாது உழைத்திட
இயற்கை பணித்த போதிலும்
பாயில்லாத கப்பல்போல்
பலரும் அலைதல் காண்கிறோம்

கரங்கள் இரண்டு வந்ததேன்
கால்கள் இரண்டு தந்ததேன்
சிரசில் தோற்றும் எண்ணங்கள்
செயலாய் ஆக்க அல்லவோ..

சோர்ந்து இருத்தல் பாபமாம்
பூமித்தாய்க்குப் பாரமாம்
நூர்ந்துபோன தீபத்தை
தூண்டி எண்ணெய் ஊற்றுங்கள்..

சுடரும் தீபம் போலவே
சுடரும் உங்கள் வாழ்வுமே
படரும் கொடிகள் நீங்களே
பற்றி ஏறிப் பரவுங்கள்..

# தொங்கும் பூந்தோட்டம்

பிரிய இதயமே...
மலர்போல் மணங்கமழ்
எண்ணங்கள் பரிமாறி
காலங்கழித்தே
நாம்சென்ற
பாதையின்றெங்கே..?

காலை மலர் மலர்ந்து
அழகிய இரகசியமொன்று கூறும்..
புரிந்துகொள்ளத்தான்
சக்தி இல்லை..

எங்கள் முன்றிலிலே
அழகிய மலர்கள் பல
மலர்ந்து வாடும்..

மலரவும் முடியாமல்
உதிரவும் முடியாமல்
ஆசைகள் எண்ணங்கள்
அந்தரத்தில் ஆடும்
புதுமையானதோர்
பூந்தோட்டம்
எங்கள் இதயங்களே...

# இருவேறு உலகங்கள்

மாடிமனை ஒருபுறத்தில்
மண்குடில்கள் மறுபுறத்தில்
கோடிசுகம் ஒருபுறத்தில்
கொடும் துன்பம் மறுபுறத்தில்

சாளரத்தின் திரை வர்ணம்
சிறுவர் இங்கு நிர்வாணம்
வேளைக்கொருவிருந்தங்கே
நாளுக்கொரு பிடியிங்கே



வாக்களிக்கும் ஏழைமக்கள்
நவயுகத்தின் கர்ணன்கள்
ஏய்த்துவென்ற வேட்பாளர்
நவயுகத்தின் கண்ணன்கள்..

ஏற்றிவைத்த ஏணிகளை
ஏழைகளை அவர் மறப்பார்
நாற்றுநட்டு இவர் உழைக்க
அறுவடையை அவர்முடிப்பார்

கல்விகற்று உயர்ந்தவர்க்கும்
செல்வம்பெற்று மிதந்தவர்க்கும்
காலடிகள் நினைவிலில்லை
மேலுயர்வே அவர்வேதம்!

உயர்வுஎன்றும் தாழ்வுஎன்றும்
உலகியலில் இருஉலகம்
இருஉலகம் இருக்கும்வரை
இங்கெவரும் மனிதரில்லை



## புலம் பெயர்ந்த தமிழினமே

நிலம் வேண்டும் - நிலத்திடையே
நிமிர்ந்து நிற்கும் மனை வேண்டும்
குலம் வேண்டும் குலமகட்கு
குலத்தோடு பணம் வேண்டும்!..

விலைபேசி நிச்சயித்து
வளையாள்தன் கரம்பிடித்து
பலர்காண மணமகனார்
பவனிவரும் ஊர்வலங்கள்!!

பொருள் சேர்க்க வாய்ப்பின்றிப்
போய்விட்ட கன்னியர்கள்
இருள்சூழ்ந்த தனிமையிலே
ஏங்குவதை இவரறியார்!

சீதனமும் அதன் விளைவால்
சமூகமுற்ற கொடுமைகளும்
சாதி. இனப் பிரக்கனைக்கு
சற்றேனும் குறைந்ததல்ல!..

சோகமுற்ற கன்னியர்தம்
  சொல்லவொண்ணா துயர்மூச்சால்
பூகம்பமாய் வெடித்ததுவே
  புலம்பெயர்த்த இனக்குழப்பம்!.

புலம்பெயர்ந்த தமிழரின்று
  பொருளீட்டும் எந்திரங்கள்!
பலகுமர்கள் கரைசேர
  பாடுபடும் மரக்கலங்கள்!

எம்மண்ணின் மைந்தர்களே
  இடம்பெயர்ந்தும் தமிழ்மொழியின்
செம்மையிலே குறைவுஇன்றி
  செழித்திருக்கச் செய்பவரே!

மண் உம்மை மறக்கவில்லை
  மண்ணைநீர் மறக்கவில்லை
கண்காணாத் தொலைவிருந்தெம்
  கருத்தைநீர் ஆளுகிறீர்!..

தமிழ்மணத்தைக் காத்திடுவீர்
  தமிழ்ப்பண்பைப் போற்றிடுவீர்
இமயமெனஉயர்ந்த மொழி
  உலகமெலாம் ஒலிக்கவைப்பீர்



# வசந்தம்

மழை பட்ட மரமொன்று
மறுபடியும் துளிர்க்க
மரங்கொண்ட செந்தளிர்கள்
புதுராகம் படிக்க



உயிர்கொண்ட வான்மீது
இடியோடுமின்னல்
உலகத்தின் எழிலெல்லாம்
ஓர்நொடியில்சொல்ல

நிறைகொண்ட உணர்வுகளை
நெறியாள்கை செய்து
கருவோடு கவிசெய்ய
கவிநெஞ்சு சொல்லும்

வசந்தங்கள் வருமென்று
வழிபார்த்திருந்தேன்
வழிபார்ப்பில் தவறில்லை
விழிக்கேக்கம் இல்லை



புரையோடிப் போய்விட்ட
புண்பட்ட இதயம்
பொலிவோடு இனிப்பாடும்
புதுராகம் மீண்டும்

# ஒரு கவிதை கலைகின்றது.......

விண்ணகத்தில்
வண்ணப் பறவைகள் சிறகடிக்கின்றன......
சிந்தனைப் புள்ளில்
சிலிர்ப்புகள் கோடி உதிர்கின்றன.....
கவிதை மலர்கின்றது
கண்களில் கனவு ஒளிர்கின்றது.....
காலம்.
இனிமையான ஒரு நவீனம் போல்
அசைகின்றது.

*

மார்கழிப் பனிபோல்
நெஞ்சைப் கவ்விய ஒரு குளிர்ச்சியில்
இதயம் மென்மையாகி
விம்முகின்து......

*

நாட்களின் அசைவு
திடீரென்று
உடைப்பெடுத்த வெள்ளமாய்ப்
போய்விடுகின்றது.....

*

இதயம் உடைகின்றது
உதிரம் பாய்கின்றது..
உள்ளம்.
ஓலக்குரலெடுத்து அரற்றுகின்றது

*

இதயம் பூங்கனவுகளை
சோகமென்ற கருந்திரை மூடுகின்றது
ஒரு தாங்க முடியாத வெறுமை
துணையாய் வருகின்றது.

*

தோல்விகள் நெஞ்சில்
கனக்கின்றன....
துயரங்கள் நெஞ்சை
எரிக்கின்றன....

*

மனம் என்ற பூ
மணமிழந்து காய்ந்து
சருகாகின்றது...

*

கட்டற்ற வாழ்க்கையோட்டம்
முட்டுவதும் மோதுவதுமாய்
உள்ளத்தைப்
படாத பாடு படுத்துகின்றது.....

*

காலம் சுழல்கின்றது
கவிதை குலைகின்றது....

*

கருப்பொருள்
கண்ணில் மெல்ல மறையும்
ஒரு பிரமையில்
உள்ளக் குழந்தையின்
ஏக்கப் பெரு மூச்சுகள்
நீலவானில் நிறைகின்றன.

*

நான்.
என்னை இழக்கின்றேன் .......

***************

# மோகன கீதம்

மோகன கீதமொன்று
காற்றில் மெல்ல அசைந்து வருவதுபோல்
முன்பெல்லாம் உன்னைக் கண்டு
ஏக்கமென்ற கொடிய நெருப்பில்
நான்
வதங்காத நாள் கிடையாது..

*

ஆயிரம் தோற்றங்கள்
உள்ளம் உணர்ச்சி பூர்வமாய் அனுபவித்து
அழகென்று மயங்கிய தோற்றங்கள்
அவற்றை மீட்டிப் பார்க்கும்போது
கிளர்ந்தெழும் இன்ப வேதனை
சொல்லப் புரியாதது..

*

ஓராயிரம் கனவுகள்
உள்ளச்சுவர்களில்
கொடிகளாய்த் தழுவிப் படர்ந்தபோது
ஒரு தவிப்பும் தாகமும்
இன்னும் ஏதேதோ உணர்வுகளும்
என்னைப் படாதபாடு படுத்திவிட்டன...

*

ஒன்றும் புரியாமலே
ஒரு தடுமாற்ற உலகில்
உலவித் திரிந்திருந்தேன்..
ஏதோ ஒரு நாள்
எனக்காக
என்னைப் படைத்தவன் எண்ணத்தில்
இன்னியமையாததாய் மாறலாம் என்று
எண்ணிப் பார்க்கவே
எண்ணத்தில் வலுவில்லை-
அப்போது...

*

இன்று....
என்னைப்பற்றிச் சிந்திக்கவும்
இறைவனுக்குத் தெரிந்திருக்கிறதே என்று
ஆச்சரியத்துடன் மகிழ்ச்சியடைகிறேன்..

*

உன்னை என்னிடத்தில் சேர்க்கும் எண்ணம்
இப்போதும்கூட
அவனிடத்தில் இல்லாமலிருக்கலாம்..
உள்ளத்தைச்
சோர்விலிருந்து தட்டியெழுப்பியதற்காக
அவனுக்கு நான்
நன்றிசொல்கிறேன்...

************

## காலங்கடந்தவன்.

நிகழ் காலம்-
வர்ணமலர் மாலை....
எதிர்காலமோ
அந்தகாரம்.....

முன்னே செல் என
விதி உரைக்கிறது...

எங்கே செல்ல
எப்படிச் செல்ல
புரியுதே இல்லை-
இந்த வாழ்க்கை...

## இதயமே வேண்டாம்.

இதயமில்லாமல்
மூளையை மட்டும் படைக்க
உன்னாலும் முடியாமல் போனதே
இறைவா..

உணர்வுச்சாகரத்தின்
நடுவே சிக்கி- என்மூச்சுத் திணறுகிறதே

## ஒரு பிறந்ததின வாழ்த்து..



உனது பிறந்த தினம்
இன்று..
அதிஷ்டமான எதிர்காலம்
கிடைக்கட்டும் என்று
பிரார்த்திக்கின்றேன்.

உண்மையில் சொல்வதானால்
தூரத்தில் தெரிகின்ற
எதிர்காலத்தில்
எண்ணம் மிதக்க
சுற்றி நிறைந்துள்ள
நிகழ் காலத்தை;-
கைக்கெட்டிய வாழ்க்கைகயை-
மறந்துபோதல் என்பது
மனிதஜாதியின்
பலவீனம்...

அதனால்
கைக்கெட்டிய வாழ்வில்
அழகைத்தேடி
சமுதாயத்தில் தோன்றும்
குறைகளை நிவிர்த்தி செய்து
அரத்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்து
ஆத்மதிருப்தியைப் பெறுவதற்கு
உனக்கு சகல வளங்களும்
கிடைக்க
ஆண்டவனை வேண்டுகிறேன்..

# உறவின் விலை பிரிவு..

பிரிவு என்பது
எங்களுக்கு மட்டுமல்ல...
வேதனை என்பது
எங்களுக்கு மட்டுமல்ல..



ஆனால்...
மனங்கள் மிக
நெருங்கியதால்....
மனமுணர்ந்த
அதிகசுகத்துக்கு-
மேலதிக மகிழ்ச்சிக்கு-
கொடுக்கப்படவில்லை
இன்னும் விலை.....

அந்தக்கடனை
இன்று
வட்டியுடன் சேர்த்துக்
கொடுக்கும் நிலை

நாட்செல நாட்செல
வட்டியும் பெருகும்.
இனியும் காலம் தாழ்த்துவதில்
அர்த்தமில்லை.......

இப்போதே கொடுப்போம்
விலை...

## நீங்கள் செய்த பாபம்..



ஆகாயத்தின்
கருமுகில்காள்
அழுவது ஏனோ..?
வெண் முகில்போல்
சிரித்திருக்க
முடியவில்லையோ...?

மனித ஜாதியோடு
உமக்கும்
சம்பந்தமுண்டா...?
எம்மைப் போல
நீங்கள்கூட
பாபம் செய்தீரா..?

## துன்பத்தில் இன்பம்..

மேகக்கன்னி
விழிமடலில்
நீர்த்துளி தோன்றும்...

மழையோ மழை
என மலர்கள்
ஆர்த்திடும் மகிழ்வாய்..



## மாதர் தம்மை..

பாரில் இன்று பாலர்யாரும்
பாடசாலை செல்கிறார்
நூறுபேரில் பாதி ஆணர்கள்
மீதி பெண்கள் பயில்கிறார

யாரும் இன்று ஆணும்பெண்ணும்
பேதமில்லை என்கிறார்
நூறு ஆண்டின் முன்பு கவிஞன்
பாரதி கண்ட கனவிதாம்...

மாதர்தம்மை இழிவுசெய்யும்
மடைமையைக் கொழுத்துவோம்
ஈது அன்று கவிதை நெஞ்சம்
உணர்ந்து சொன்ன வார்த்தைகள்

சூதுவாது ஏதுமற்று
சுடர்ந்த கவிஞன் கூற்றினால்
மாதர் தங்கள் வேதனைகள்
மடிதல் இன்று காண்கிறோம்

பெண்ணின் உரிமை இவைகளென்று
படித்துப்பட்டம் பெற்றவர்
முன்னில் மேடைதன்னில்நின்று
முழங்குகின்ற வார்த்தைகள்.......

பெண்மை புன்மைஉறுதல் கண்டு
புலம்பித்தவித்த பாரதி
சொன்ன வார்த்தைமுன்பு இவர்கள்
சொல்லில் ஆழம் ஏதம்மா?.....

வீட்டில்பெண்ணைப் பூட்டிவைத்தார்
விந்தைமனிதர் அந்தநாள்
நாட்டில் இன்றும் தனித்துச்செல்ல
நங்கையர்கள் தயங்கலேன்

ரோட்டில்சுற்றும் வாலிபர்தம்
தேவையற்ற கேலிகள்
வீட்டில் இன்றும் பெண்ணைமீண்டும்
பூட்டமுனைவதேனம்மா

பத்துத்திங்கள் சுமந்துஎம்மை
பெற்றெடுத்த தாய்மனம்
நித்தம்நித்தம் மெழுகுபோல
தேய்ந்துருகி ஒளிருமாம்

பெற்றபிள்ளை உணர்வுகளைப்
பேணிமேன்மை சேர்த்திடும்
சுக்திகொண்டதாய்நிகர்த்த
சக்தி ஏதும் உள்ளதோ..?



கூலிவேலைசெய்யும்ஏழைப்
பெண்கள்நிலைமை சோகமாம்
வேலைக்கேற்றகூலிஇல்லை
ஆணில்பாதிகூலியே...

வேலைவிட்டு வீடுவந்து
ஓயவழியும் இல்லையாம்
மாலைநேரவேலை வீட்டில்
மலையைஒத்திருக்குமாம்....

மாதர்தம் கரம்பிடிக்க
சீதனங்கள் கோருவார்
காதல்கொண்டபெண்மனத்தில்
வேற்கணைகள் வீசுவார்

சொத்துப்பத்து இல்லையென்றால்
சொல்லிடாமல் ஓடுவார்
கற்புடையபெண்ணையாரும்
கடவுளாகக்காண்கிலார்

சக்தியின்றி சிவமுமில்லை
சித்தர்சொன்ன முடிவிது
பத்துமாதம்சுமந்திடாமல்
பிள்ளையொன்று ஏதம்மா........?

புத்திதன்னில் இந்தஉண்மை
புரியவைப்பதென்னவோ
நித்தம்பெண்மை வாழ்ந்திடாமல்
ஆண்மையொன்று இல்லையே...

உணர்ச்சிக் கவிஞன்அன்றுசொன்ன
உண்மையான வார்த்தையும்
முதிர்ச்சிகண்ட அறிஞர்ஆய்ந்து
முழங்கும்வார்த்தை ஜாலமும்

இணைத்துப்பார்க்கில் யாவருக்கும்
இலங்கும் ஒரே சத்தியம்
ஆண்மைபெண்மை என்றிவற்றைப்
பிரித்துப்பார்த்தல் மடைமையே..

அணுக்கள் இரண்டு ஒன்றுசேர்ந்த
ஒட்சிசனின் கூறுபோல்
பிணக்கில்லாது ஆணும்பெண்ணும்
புரிந்து சேர்ந்து வாழ்வதால்

உடுக்கள் கோடி உலவுமிந்த
அண்ட வெளியில் பூமித்தாய்
தனக்கு உரிய சமநிலையில்
தளர்ந்திடாமல் ஜீவிப்பாள்.......





# இலக்கணம்..

'அவள்'
'இவனின்'
எதிர் வந்தாள் -
'எதிர்ப் பாலாய்'
'எதிர்ப் பதமாய்'...

அருகமர்ந்தவள்
'ஒத்த கருத்தா'னாள்

இன்று
எங்கே அவள்
எனக்குள்ளே நிறைந்த
அந்த
தோன்றா எழுவாய்.....?

# ஓர் மெல்லிதயம்..

பூவாய் முன்பிருந்தேன்
முள்ளாக மாறிவிட்டேன்
பூவை அவள் நெஞ்சை
கொல்லாமல் கொல்லுகிறேன்..

பாவை அவள் நெஞ்சு
பஞ்சென்று உணர்ந்தபின்னும்
தீயை தீநாக்கால்
தினந்தோறும் கொட்டுகிறேன்..



காதல் மலர்க்காவில்
கூதல் பனிப்போர்வை
மீதில் அவள் சிலிர்க்க
முடியாமல் என்ன இது..

என்னை ஒருபுறமாய்
கொல்லுகின்ற துன்பங்களை
பெண்மை மென்மையிடம்
சொல்லுவதில் என்ன பயன்

என்னை நோவதன்றி
ஏதேனும் தெரியவில்லை.
என்ன காலமடா
என்னை மிக மாற்றுதடா.

ஏதோ வார்த்தைகளை
அவசரத்தில் வீசிவிட்டு
புழுவாய்த்துடிக்கின்றேன
பூவையவள் அழுவாளோ...?



## சுட்டும் விழிச்சுடர்கள்..

சுட்டும் விழிச் சுடர்களிடம்
சூரியன்கள் காணுவான்
சூரியன்கள் சந்திரராய்த்
தேயமனம் நாணுவான்

மொட்டு இள மலர்களிடம்
மெல்லிதயம் தேடுவான்
மென்மையது பொய்மையதாய்ப்
போகமனம் வாடுவான்...

செல்லும்வழி தெருவிலெல்லாம்
சேல்விழிக்காய் ஏங்குவான்
சேல்விழியாள் காணும்வரை
சாலைவழி தூங்குவான்.

மன்றம் வந்த தென்றலிடம்
மனக்குறையைக் கூறினான்
மனமிரங்கித் தென்றலிலே
மிதந்து வந்தாள்நாயகி...

# உன் ஆட்சி...



கட்ட மிட்ட
வலைப் பின்னல் -
அதனூடே
வெட்டு மிரு
விழி மின்னல்.....

மூட்ட மிட்ட
மழை மின்னல் -
இவையூடே
நோட்ட மிடும்
விழி ஜன்னல்......

வாட்டு கின்ற
துயர் இன்னல் -
இவையூடே
தேற்றும் இரு
விழிக் கன்னல்

காட்டுமரக்
கண்காட்சி -
கவிஞனுக்கு
காட்டுதம்மா
உன் ஆட்சி

# உதிர்ந்த பூக்கள்...

உணர்வுகள் பூத்து
வாடிடும் உலகில்
உன்னைப் பார்த்துப்
பரவசப்பட்டேன்..

கனவுகள் கண்டேன்
நினைவிலினிதாய்
கன்னம் மின்னக்
கடைக்கண்ணோக்கில்

கவிகளின் சுவையை
நிமிடத்தில் காட்டி
கண்ணைப் பறித்துக்
காட்டிலிட்டாய்

புவிமிசை பொய்மை
செழித்தது வளர்ந்தது
பூவைத்தேடிப்
போகின்றேன் நான்....

## மறைந்த இனிமை..

மார்கழிப்பனியில்
மயங்கிய நிலையில்
மனம் கழித்திருந்த
நாட்களெங்கே



யார் அதைக் கவர்ந்தார்
யாம்இனி உலகில்
யாத்திட முடியாக்
காவியங்கள்

சீர் அழகாலே
சிந்தையில் தூய்மை
சேர்த்துவைத்தபொற்
பாவைகளே..

நேரினில் நினைவில்
கனவினில் நீங்கள்
நிறைந்ததெல்லாம்பொய்க்
கற்பனையோ



## மறுபிறவி

செத்துப் போன
கவி யொருவன்
சிலிர்த்தெழுந்தான் - உன்
பட்டு விழிகள்
பரவசமாய்ப்
பார்த்ததனாலே

பட்டுப் போன
உணர்வு எல்லாம்
குட்டி போட்டன - நீ
கொட்டும் மழைத்
தாரை யெனக்
குளிர்ந்ததனாலே


வட்ட நிலா
வான் வெளியில்
வந்து உதித்தாள் - இவன்
மற்று மொரு
மறு பிறவி
பெற்றே உயிர்த்தான்...



## பெண் நிலவு...

பொன்னின் மணித்தகட்டில்
பூவாலே கோலமிட்டு
விண்ணில் மதியமென்று
விட்டுவைத்தோன்
வீசும் கனைவிழியேன் வைக்கவில்லை.....?

குறைநீக்க
என்முன்
எதிரே ஓர் மெல்லிளமை
என்னே விழிச்சுடரின் கூர்மை....



# வானத்தில் ஆயிரம் பூமலரும்

வானத்தில் ஆயிரம்பூமலரும் -அவை
வாடி மண்ணில் விழுந்துவிடும்
மண்ணிலும்கோடி மலர்மலரும்-அவை
தன்னிலும் நிலையாய் இருப்பதில்லை

காலையில் பூத்தமலர்களெல்லாம்-பின்
கருகிவாடி உதிருவதேன்...?
சோலை தவழும் இளம்தென்றல் -பின்
சுழலும் புயலாய் ஆகுவதேன்..?

உறவும் பிரிவும் உலகினர்க்கு-அந்த
இறைவன் அளித்த இரவுபகல்
வரவும் செலவும் வழியிலுண்டு-இது
வாழ்க்கைப் பாடத்தத்துவமாம்..

மின்னல் பார்த்து மயங்குகிறோம்-அது
மின்னி மறைந்து போவதனால்
கண்ணில் மறையும் காட்சிகளே-நம்
கருத்தை என்றும் ஆட்சிசெய்யும்

*******

## இலையுதிர் காலம்

ஒருமலர் அங்கே
தூரத்தில்...
ஓய்வதே இல்லா
போருக்குள்...
உருகுது நெஞ்சு
ஈரத்தில்........
உதிருது விழிநீர்
பாரத்தில்....

பால் நினைந்தூட்டும்
தாயங்கே
பட்டினித் துயரில்
துடிப்பாளோ..
சேய்ப்பசி போக்க
தன்உதிரத்
துளிகளைப் பிழிந்து
கொடுப்பாளோ....

வழிகளில் தடைபல
இருந்தாலும்
களவாய்க் கடல்வழி
சென்றேனும்
துணைபடும் துன்பத்தின்
பங்குகொள்ள
தனிவழி மிதிவண்டிப்
பயணங்கள்...

காடுகள் எம்மை
　　வரவேற்கும்
சூடு தணித்திடும்
　　குடையாகும்..
நாடுகள் நகரம்
　　பசிபோக்கும்.
பாடிடும்நா மனக்
　　களைப்பாற்றும்...

நால்வகை நிலமும்
　　கால் பதிப்போம்
முல்லை குறிஞ்சி
　　மருதமுடன்
நெய்தல் நிலமாம்
　　கிளாலி வந்தால்
பயணம் தடையுறும்
　　படகிலையேல்....



கடலதன் கரையில்
　　தலை வெள்ளம்.
கடலெனக்குமுறும்
　　அவருள்ளம்..
விடைகிடையாத
　　எதிர்காலம்
வீணே கழியுது
　　நிகழ்காலம்....

ஒருபுறம் இங்கே
ஈக்கள் தொல்லை.
மறுபுறம் காற்று
மணலைத் தள்ளும்..
இருட்டினில் வானில்
தீப்பொறிகள்..
பயத்தினில் கதறிடும்
பாலகர்கள்...

பசியுடன் தாகம்
பயம் விரட்ட
நிசிவரை தூக்கம்
நெருங்காமல்
சிசுக்கள் பெண்கள்
முதியவர்கள்
பிசுபிசு மணலில்
தவங்கிடப்பர்...

மலர்ந்திடும் காலை
காண்பதில்லை
மயங்கிடும் மாலை
தோன்றலில்லை
நகர்ந்துவிடும் நட்கள்
நினைவிலில்லை
உதிர்ந்திட இலைகள்
இனியும் இல்லை....



## சோலை ஒன்று.

சோலை ஒன்று
நடந்து வந்தது......
சாலை மரங்கள்
தலை குனிந்தன.....

கனகாம்பரங்கள் -
அவள்
கட்டிவைத்த
கூந்தலைச் சேர்ந்ததால்
மல்லிகைகள்
மணமிழந்தன..

மின்னலும்
ஒருகணம்
எட்டிப்பார்த்து - பின்
வெட்கி மறைந்தது..

சோலை ஒன்று
நடந்து வந்தது....
சாலை மரங்கள்
தலை குனிந்தன.....

## குறிஞ்சி மலர்...

உச்சி மலைப்
பிரதேசம்
பச்சைப் பசேல்
மரவாசம்
தத்துங்கிளி
தருகானம்
சித்தமெலாம்
சுகராகம்....



பட்டம் பெறப்
பயில வந்த
பட்டு நிகர்
பூங்காக்கள்..
நுட்பத்திறன்
நிறைஞானச்
சித்திரமாய்ச்
சிலபூக்கள்...

முத்துதிர்ந்த
மொழிபேசும்
சிட்டு ஒன்று
அருகாக
சித்தமெலாம்
சிலநேரம்
பித்தடைந்து
பிறழ்வாகும்

சிற்ப மகள்
உடல்வாகு
சித்தமதைப்
பந்தாடும்
பொட்டு வைத்த
பண்பாடு
மொட்டு அல்ல
எனக்கூறும்...

மொட்டு நிகர்
எழில் தோற்றம்
கிட்டவர
எனைத்தூண்டும்
புத்தம் புது
பொன்வீணை
தொட்டு விரல்
பண்மீட்டும்....



கற்சிலையின்
குயிலோசை
கற்பனைக்கு
விருந்தாகும்
பொட்டுவைத்த
பிறைநுதலோ
மொட்டு அல்ல
எனக்கூறும்

சுற்றிநிற்கும்
சிங்களங்கள்..
தத்தை இவள்
தமிழ்ப்பெண்ணாம்
முத்துத்தமிழ்
மணம்வீசி
சித்தமதைச்
சிறைசெய்தாள்..

கற்பனைக்குள்
அடங்காத
அற்புதமோ
இவள் தோற்றம்
பித்தடைந்து
பண்பாடும்
பாத்திரமோ
என் மாற்றம்..



சிற்பமகள்
முன்னாலே
பித்துமனம்
பின்னாலே..
கொட்டும் மழை
முன்னாலே
வெட்டும் மின்னல்
தன்னாலே

வைத்தபேர்
    என்னவென்றோ
தகத்தையூர்
    என்னவென்றோ
எத்தனையோ
    கேள்விகளை
இத்தனைக்கும்
    கேட்கவில்லை.

விட்டுவந்து
    மறுபடியும்
சுற்றிச் சுற்றித்
    தேடிநின்றேன்..
வெட்டவெறும்
    வெறுமையதே
முற்றும் அங்கு
    மூடக்கண்டேன்..



பச்சைமலை
    தூரச் செல்லும்
இச்சைக்கிளி
    காண்பதெங்கே
முட்டும்மன
    வேதனையோ
கொட்டிவரும்
    கவிமழையாய்...

## நியதி மாறுமோ....



காலைப் பொழுது புலர்ந்திட
கமலமுகம் மலர்ந்திட
கீழைத் திசையில் கதிரவன்
கீற்று ஒளியைப் பரப்புவான்..

பாலர் கூட்டம் பள்ளிக்கும்
மக்கள் கூட்டம் தொழிலுக்கும்
விலங்குக் கூட்டம் உணவுக்கும்
ஒழுங்குமுறையில் சென்றிடும்....

இரவு பகல் பொழுதுகள்
வசந்தம் கோடை மாரிகள்
வரவும் செலவும் வருதல்போல்
வாழ்வின் இயல்பாய் ஆயின..

புதுமையாக புரட்சியாய்
பொங்கி எழுந்தாள் கடலன்னை
எதையும் புரிந்து கொள்ளுமுன்
எடுத்துச் சென்றாள் உயிர்களை..

ஊட்டி வளர்த்த அன்னையே
உயிர் பறிக்கத் துனிந்ததேன்...?
வாட்டம் கொண்டு உயிரெல்லாம்
வதங்கித் துவண்டு ஏங்கின....

விதிகள் எங்கு விலகின...?
நியதி எங்கு மறைந்தது..?
கதிகலங்கும் இயற்கையைக்
கண்டு ஏங்கி நிற்கிறோம்

## கனவுகள் நனவாகும்...

வானத்து வீதியிலே
வண்ணவண்ண
வாலில்லாப் பட்டங்களாம்
மோனத்தில் ஏங்குகிறேன்
கையில் ஒன்று
மோதி விழாதா என்று...

நீலத்தில் மயிலதுபோல்
வெள்ளை நிற
நெடிய கொக்கதுபோல்
கோலத்து வண்ணங்களே
கொஞ்சியிடும்
நகரை மீனதுபோல்....

ஆடுது ஆடுது பார்
அங்கேயொன்று
அறுந்து விழுகுது பார்.
ஓடுது ஓடுது பார்
சிறார் கூட்டம்
ஒருவர் பின்ஒருவராக...

அதோ அந்தப்பட்டம்
சிறுவர்தம்
அழகிய கைகளிலே
இதோர் வெற்றிப்படி
இன்னும் இன்னும்
எண்ணியதெய்துவிட...

கற்பனை வளர்த்திடுங்கள்
அத்தோடுநற்
சாதனை புரிந்திடுங்கள்
வெற்றிகள் எமதுமடி
வந்துவிழும்
வேண்டிய வேளையெல்லாம்

சித்தமதில் தெளிவும்
செயல்தனில்
சீர்மையாய் நேர்மையுடன்
இத்தரை ஆள்பவராய்
நாளை இங்கு
நிச்சயம் நீர் இருப்பீர்...

# இடைப்பாலம் போடுங்கள்..

வண்டொன்று மதுவுண்டு
பண்பாடி ஆடும்..
கண்டெந்தன் மனந்தன்னில்
கவியொன்று ஊறும்

மென் தென்றல் இதுகண்டு
மெதுவாகப் பாடும்
என்றென்றும் இதுபோல
இனிமை மனம் நாடும்....

கன்றொன்று பசியென்று
தன் தாயைத் தேடும்
நண்டொன்று கடலோரம்
வளை நோக்கி ஓடும்.

உண்டுறங்கும் கனவோடு
ஏழைமனம் வாடும்.
என்றெங்கள் துயர்தீரும்
என நெஞ்சு ஏங்கும்

இனிப்பென்றும் கசப்பென்றும்.
இரு தோற்றம் கண்டு
விருப்பென்றும் வெறுப்பென்றும்
மனமாற்றம் கொள்வோம்...

பிறப்புக்கும் இறப்புக்கும்
இடைப் பாலம் போட்டு
சிறப்போடு இல்வாழக்கைப்
பயணத்தைத் தொடர்வோம்



## எதிர்மறை இயல்புகள்.

களத்தில் பணிபுரியும்
கடமையது வாய்த்தமையால்
உளத்தைத் தொடும்தோற்றம்
உருவாக்கும் கவிதைகளை..

தொட்டாற் சிணுங்குகின்ற
செடியன்று பார்தோமே
பட்டாற் கால்கிழிக்கும்
பற்றைகளும் கண்டோமே

தொட்டாற் சுருங்கிகட்கோ
தோள்வலியே சிறிதுமில்லை
பற்றை முட்களுக்கோ
பலமிருந்தும் இதயமில்லை

இந்த இருவகையே
இங்கும் காணுகிறோம்
பயந்தோர் ஒருபுறமும்
பாவியர்கள் மறுபுறமும்





## சின்னச் சின்னக் கண்ணனுக்கு...

மென்சிவப்புப் பொன்னுடலை
மணங்கமழும் பூவுடலை
என்கரங்கள் அளைந்து
விளையாடிட வேண்டும்...
ஏனோடா அவ்வினிமை
அணுக வில்லை....?

விண்ணழுதால் மழையென்பார்
விழியழுதால் துயரென்பார்
கண்ணா நீ அழுதாயேல்
ஓடி வந்து
'ங்கா' தருவார் 'பசியாக்கும்'
என்று சொல்லி.

வண்ணத்துப் பூச்சிகளின்
வண்ணத்தில் கண்தோய்ந்து
உண்ணாமல் அடம்பிடித்தல்
நன்றோ கண்ணா....?
உணராயோ உணவுக்குள்
உலகே அடக்கம்....

வருந்தொல்லை புயலினைப்போல்
வதைத்தாலும் கலங்காத
இரும்பாக நெஞ்சத்தை
ஆக்கிக் கொள்ளு....
இளகுதற்கு வேண்டும்போது
இளகச் சொல்லு..

சித்திரங்கள் வரைவதிலே
சிலபொழுதைச் செலவிடலாம்
நித்திலமாய் அழகு சிறைப்
பட்ட கூடம்
நீயதைத்தால் பயனுண்டு
பிறர்க்கும் கூட...

பல்கலையும் கற்றிடலாம்
புதுக்கவிதை புனைந்திடலாம்
எத்தனை நாள் வாழ்வுஎன
எண்ணல் வேண்டா
எப்படிநாம் வாழ்கின்றோம்
என்றே எண்ணு...

## ஊர் என்ற தேன்கூடு.



ஊர் என்ற தேன்கூட்டை
உணர்வாலும் உழைப்பாலும்
சீர் செய்த பெரியோர்கள்
சிறப்புற்று வாழ்ந்தார்கள்

போர் என்ற வேடன்தன்
பசிக்கதனை உணவாக்கி
கோரமாய் சிதைக்கின்றான்
கொடுமையாய் வதைக்கின்றான்

திசைக்கொன்றாய்ப் பறக்கின்ற
தேனீக்கள் கூட்டம்போல்
சிதைவுண்டு மனிதர்கள்
செல்கின்றார் எங்கெங்கோ...

நண்பரைப் பிரிகின்றோம்
நம்மண்ணை இழக்கின்றோம்
சொந்தங்கள் கலைகின்றோம்
சொல்லேது துயர்சொல்ல....

ஊர் என்ற தேன் கூடும்
போர் என்ற வேடுவனும்
பார் உள்ள நாள்மட்டும்
தீராத முரண்பாடோ....?



## எப்போது இங்கே மழை தூறும் ?

பூக்களைச் சரம்கட்டி
பூந்தென்றல் தாலாட்டில் அசைந்திடவே
விழிமீது விட்டுவைத்தேன்

காற்றெனிலோ
கடுங்கோடை வரட்சியினால் கருக்கிடவே....
வாடிய பூச்சரம் என்
விழியிரண்டைக் கீறிவிடும்..

கண்ணீர் பிறந்தது அதில்...
வானத்துக்கு இன்னும் இரக்கமில்லை
வரட்சிக்கு முடிவு இல்லை..

மூட்டமிடும் மேகங்கள்
சிலபோதில் கலைந்துவிடும்
பூச்சாண்டி காட்டி.......

ஏக்கம்..
பெருமூச்சு..
எப்போது இங்கே மழை தூறும்?..

## 'கானல் நீர்.....'

செங்கதிரோன் வெம்மையினால்
சுட்டெரிக்கும் பாலைவனம்
அங்குவளி விரிவடைய
நீர்போல் தோன்றும்
அருகில்வர கானல்நீர்
எங்கோ மறையும்....

பொய்யான அடித்தளத்தில்
புனைந்திருக்கும்கவிதையெல்லாம்
மெய்யாமே என்று மனம்
முதலில் சொல்லும்
வேளை செல்ல வேளைசெல்ல
உண்மை வெல்லும்

புத்தகத்தைத் தீண்டாமல்
பொழுதெல்லாம் விளையாடி
நித்திரைக்குப் போவார்கள்
நேரத்தோடு
புத்து'ஏ' அவர்களுக்கு
கானல் நீரே...

பொய்கூறத் தயங்கியிடார்
புகழ்ந்துரைத்து பசப்பிடுவார்
மெய்வருந்தி உழைப்பதற்கு
மனமே இல்லார்
உள்மனதில் அமைதிபெறல்
கானல்நீரே...


புகழுக்காய் பொருள் தருவார்
படம்பிடிப்பார் பலர்க்குரைப்பார்
கொடைவள்ளல் ‘தாம்’ என்று
கூவிச் சொல்வார்
கொடை என்னும் சிறப்பவர்க்கு
கானல் நீரே..

சட்டங்கள் இயற்றிடுவார்
புத்தகத்தில் வெளியிடுவார்
சட்டைசெய்யா மனிதரிங்கு
இருக்கும் வரைக்கும்
சட்டங்களும் திட்டங்களும்
கானல் நீரே...

## மைதீர்ந்த பேனாவோ.?

முட்டும் நினைவலையில்
முற்றாத நிலவொளியில்
முற்றத்தில்
முக்தியடையப்
பாக்கியம் செய்தேன்..

மொட்டவிழ்ந்த
மலர்கள் கூட எனைத்
தொட்டு மகிழ்ந்தே
தோளில் சாய்ந்திட....



கட்டிலா எண்ணக்
கலவையில்
களிப்புற எண்ணிக்
கண்ணயர்ந்தேன்...

மறுநாள்
எழுந்தேன்..-
பதிக்காத எண்ணங்கள்
பறந்து போய்விட...

நானோர்
மை தீர்ந்த பேனாவோ....?

## கண்ணீரில் ஒரு கவிதை..

அன்பின் கவிபாடி
அழகாய் மலர்ந்திருந்த
பண்பின் உள்ளமிது
பாழ்வெளியில் காத்திருக்கும்

கள்ளி இலைகளையும்
கவிதை இழைகளிலே
அள்ளி முடிவதென்ன
ஆசையெனும் தேனினிலே

ஓடிக் களைத்துவிட்டு
ஓலமிடுவதிலே
வேடிக்கை என்ன
வேதனைகள் என்னவென்ன..

பாடிப்புகழ்கின்ற
பாவைகளைப் பூவைகளை
தேடித் திரிகின்ற
வண்டுகளோ ரெள்ளையடி..

காற்றில் அலை மோதும்
கார்கால மேகமென
ஈற்றில் அவைகளுக்கு
இனிமைத்தேன் பார்வைகளை

காட்டி கயல் விழியில்
 காதலெனும் இன்னிசையை
மீட்டி மயக்குகின்ற
 மங்கையடி- கவிதைமனப்

பூங்காவினிலேயோர்
 புயல்வீசச் செய்துவிட்டு
தாங்காது இங்கோர்
 தனியிதயம் தவித்திருக்க

வெற்றித் திருவிழிகள்
 முன்வைத்து வண்டுகளைப்
பற்றி இழுக்கப்
 போய்விட்டாய் -உன்னிதயம்

தொட்ட மனத்திங்கே
 சோகம்தான் சுட்டெரிக்க
கட்டுக்கடங்காமல்
 கதறும் இவ்வுள்ளத்தை

தட்டிக் கொடுக்காமல்
 தாலாட்டுச் சொல்லாமல்
விட்ட இடத்திருந்து
 விழிவீசப் போய்விட்டாய்..

சென்ற கனவுகளைச்
 சேகரித்து வைக்குமிந்த
குன்றில் கவிதையெனும்
 செடிவளர்ந்து வாடிவிழ

தென்றல் தேம்பியழ
தேன்மலர்கள் கூம்பியிட
மன்றம் தவழ்கின்ற
மனவீணை ராகங்கள்

ஒன்றாய்க் கூடியொரு
ஓலமிட்டே எனைச்சிதைக்க
கொன்றேபோட்டென்னைக்
கொடியவளே ஓடுகிறாய்

வெட்டும் விழிவீச்சில்
வியப்புக்கள் காட்டியதேன்
மொட்டுச் சிரிப்புகளை
முகமலரில் தீட்டியதேன்

கொட்டும் மழைத்தாரை
போல்உள்ளம் குளிப்பாட்டி
வெட்டவெளி வெய்யில்
விட்டதென்ன சுட்டிடவே...

கண்ணின் கருவிழியில்
கவர்ச்சியெனும் இரையாடும்
மன்னர்கூட அதில்
மயங்கி வசமிழப்பார்

பெண்ணே உன்னையொரு
பேயென்று சொன்னாலே
மண்ணில் மென்னையொரு
மாமனிதன் என்றுணர்வார்

ஈற்றில் இவையெல்லாம்
எதற்கு இனியுன்னைக்
காற்றில் அலைந்தாடும்
குப்பையெனக் கண்டுகொண்டேன்

பாட்டில் எனை நுழைத்து
உணர்வுகளைப் பழகியதால்
வீட்டில் கவிதைமடி
வீழ்ந்தேநான் வாழ்ந்திடுவேன்......

************



# கண்ணீர் உலர்ந்த சுவடுகளில் ஒரு கவிதை

கவிதை சொன்னபின்னே
கண்ணீரும் உலர்ந்தபின்னே
அவஸ்தைப் படுவதெல்லாம்
அர்த்தமில்லாச் செயல்களென்று

புரிந்தேன் - புரியாத
இவ்வுலகப் பயணமதில்
தெரிந்த காட்சிகளைச்
சுவைப்பதற்கே கண்படைத்த

சிறிய பிறவிகள் நாம்
சிந்தையெனும் அலைகடலில்
எறியும் நினைவலையில்
எப்போதும் அமைதியின்றி

தட்டுத் தடுமாறித்
தவிதவிக்கும் நாங்களெல்லாம்
முட்டி மோதுவதில்
என்ன குறை...-விட்டவழி

சென்று முடிப்பதுவே
பயணத்தின் நோக்கமது
வந்த பாதைகளை
மீட்பதிலே என்ன பயன்...

சரியும் பிழையுமென்று
சிந்தையிலே தோன்றுவதே
புரியா மொழியொன்றில்
புகல்கின்ற விடுகதைதான்

எதையும் உணர்ந்திடுமுன்
இக்கணமே மறைந்திடலாம்
பதிலும் கேள்விகளும்
பஞ்சாகிப் பறந்திடலாம்

உன்னில் தவறென்றும்
என்னிதயம் எரியுதென்றும்
சொன்ன மொழிகளிலே
அர்த்தமில்லை – என்னுயிரே..

கண்கள் எனக்காகச்
சிலகாலம் கனிந்தமைக்கும்
எண்ணம் என்னிடமே
சுற்றிச் சுழன்றமைக்கும்

அன்பின் கவிதைகளை
அழகாய் மலர்த்திவைத்த
பண்பின் அழகுகட்கும்
பார்வையிலே தேக்கிவைத்த


கருணை மழையதனால்
கவிஞனுள்ளம் சிலிக்கவைத்த
பெருமைச் செயல்களுக்கும்
பாவலனாய்ப் பிறந்தமையால்

நன்றி ஒரு கோடி
நல்குகிறேன் கவிதைகளில்
சென்ற இனிமைகளை
மறந்துவிடும் மடையனல்ல

இந்த இளங்கவிஞன்
இன்றுன்னைப் பிரிந்தாலும்
அன்று நடந்தமைக்காய்
ஆயிரமாய் அன்புமழை

பொழிந்து செல்லுமிவன்
பாதையிலே உன் வரவால்
பதிந்த சுவடுகளில்
பாடல்களைத் தூவிடுவான்...

************



## கன்னியின் கனவு.....

ஏங்கித் தவிக்குது
எந்தனுள்ளம்..
இணைவது என்றென
எண்ணியெண்ணி...

தூங்கிக் கிடக்குது
காலமிது
துயரம் துடைப்பது
எந்த நாளோ..?

தாங்கிடும் சுமைகளைச்
சேர்த்துவிட்டு
தவிப்புடன் அணைத்தே
எந்தன் கண்ணன்

தேங்கிடும் ஆசைகள்
தீர்க்கும்வரை
துயிலாதிருப்பேன்
கன்னியிங்கே......



*********

# ஊமை நெஞ்சினிலே

ஊமை நெஞ்சினிலே
ஒருகோடி ராகங்கள்
ஒன்றும் புரியாமல்
உருவான கீதங்கள்

உதிரும் மழைத்துளிகள்
ஒவ்வொன்றாய்க் கதைபடிக்க
ஓடும் வெள்ளமென
வாடுதடி உள்ளமிங்கே.

காதல் கனிந்திடுமுன்
காரிகை நீ கரைந்துவிட்டால்
மோதும் வேதனையை
வெல்லுவது எவ்வாறு..

தவறு செய்வதற்கும்
தடுமாறி வீழ்வதற்கும்
இறைவன் வழிவகுத்தால்
எப்படிநான்அதை வெல்ல

உந்தன் பூமனத்தை
உருவாக்கும் சுகந்தத்தை
இந்தக் குருடனுக்கு
ஏன் இன்னும் புரியவில்லை



காதல் கவி சொன்னேன்
கடிதங்கள் பல வரைந்தேன்
ஏதும் பயனில்லை
என் நெஞ்சம் திருந்தாமல்..

குழந்தை உன் இதயம்
குருடனுக்குத் தெரியவில்லை
குழந்தை உன் மழலை
செவிடனுக்குப் புரியவில்லை

முட்கள் பார்த்த கண்ணால்
பூவுன்னைப் பார்த்ததனால்
முள்ளோ மலரிதுவோ
மயக்கத்தில் முனகுகிறேன்


கண்ணில் தவறிருக்க
காட்சிகளில் தவறென்றேன்!
புண்ணின் இதயத்தில்
பூவின் மணம் புரிந்திடுமா....?

உன்னில் தவறு சொன்ன
உலகத்தின் தவறுகளை
சொல்லத் டிதரியாமல்
தூயநெஞ்சை எரித்துவிட்டேன்

இந்த மனத்தினிலே
எப்போதும் ஆர்ப்பாட்டம்
ஒன்றும் புரியாமல்
உருவான மனவாட்டம்

ஓடும் நதியினிலே
ஆடுகின்ற படகானோம்.
எங்கே ஏன் பயணம்
ஏதேனும் புரியவில்லை..

*********



## திசைமறந்த ஓடங்கள்..

பூக்கள் பலசேர்ந்து
பூமாலை ஆனதம்மா..
புதுமை மணத்தோடே
பொழுதுகளும் போனதம்மா

இளமை ஊஞ்சலிலே
ஆடுகின்ற சிட்டுக்களாய்
அழகுத் தாரகையாய்
அந்திவான் தொட்டிருந்தோம்

அறிவுக் கடல் நீந்த
ஆயுதங்கள் தேடவந்தோம்
உணர்வுச் சுழி எம்மை
அதற்குள் எங்கோ இழுக்கிறது..

எங்கள் ஓடங்கள்
எதிர் நோக்கும் லட்சியங்கள்
எங்கோ தெரியவில்லை
இங்கேயே சுழல்கின்றோம்...

********

# ஒன்று சேர்தல்

ஏழு வர்ணம் கலப்பினும்
இழைந்து நெருங்கி இருப்பினும்
சூழும் அழகு கொள்ளையே
சொல்ல வார்த்தை இல்லையே

ஸ்வரங்கள் ஏழு சேர்ந்ததும்
இனிய கானம் தோன்றிடும்
சிரங்கள் ஆட செவிதனில்
தேனாய் அதனைப் பருகுவர்

இதழ்கள் ஏழு சேந்ததால்
எழிலாய் மலர்ந்த பூக்களே
இதமாய் அமைந்த கோலத்தின்
இரகசியம் என்னவோ..

சிதறிக் கலைந்த மணிகளைச்
சேர்த்துக் கோர்த்துப் பாருங்கள்
புதிய அழகுப் பொலிவுடன்
புன்னகைக்கும் மாலையாய்..



ஒன்றுசேர்தல் அழகென்றால்
ஒன்றுகூடல்அழகென்றால்
மன்றம் தவழும் தென்றலே
மனிதன் பிரிவதேனம்மா..?

*******

## ஊரெல்லாம் எரிகிறது..

ஊரெல்லாம் எரிகிறது..-
என் வீட்டுமலர்களொன்றால்
ஏதும் கவலையின்றி
எந்நாளும’போலவே
சிரித்து மலர்கிறது...

கூரைகளில் தீப்பற்ற
குமுறியிடும் இதயங்களில்
அனல்பற்ற
இங்கேநான்.
கொதிக்கின்ற தேனீரின் சூட்டுக்காய்
சூ என்று முனகுகிறேன்....

உணவின் வரவினுக்காய்
உடல்சோரக்காத்திருக்கும்
இளைய தலைமுறைகள்
அகதி முகாம்களிலே....
இங்கேயோ
உணவுசெரிப்பதற்கு
ஓர்வழியும் காணோமென்று
உள்ளம் சலிக்கின்றேன்.-
நான்......

கன்றை இழந்துவிட்டு
கதறுகின்ற தாய்மையங்கே..
மக்கள் மனைவியின்றி
தவிக்கவைத்த கொடுமையங்கே

இங்கேயோ
காதலியைக் காண்பதற்கு
ஹெலிகொப்டர் ஒன்றிருந்தால்
பறந்துபோய்விடலாம்
என்ற
நயமான கற்பனைகள்...

கண்ணீர் மழையாலே
கன்னங்கள் நனைகையிலே
இங்கே
விண்ணின் மழையாலோ
உடைகள் நனைந்ததென்று
கோபம் வருகிறது
எனக்கு....

ஒட்டி உலர்ந்துவிட்ட
மார்பகங்கள்
பால்சுரக்க மறுத்துவிட
வீரென்று அலறும்
சிசுக்களங்கே..
இங்கேயோ
தேநீரில் பால் இன்னும்
சற்றுச் சேர்த்திருந்தால்
என்ன குறைந்துவிடும்
என்று
உள்ளம் அரற்றுகிறது..
சொல்லவொணா இடர்நடுவே
துயரத்தில் துடிக்கின்ற
அந்த உயிர்களதன்
அமைதிக்காய்

பக்திப் பாடல்கள்
வானொலியில் உலவுகையில்
காதல் பாட்டேதும்
ஏதும் அலைவரிசை
மீதில் கிடைக்காதா
என்று
திருப்பிச் சலிக்கின்றன
என் கைகள்..

இனத்தை தேசத்தை
ஏதொன்றும் நினைக்காமல்
தனக்காய் வாழ்ந்திடவே
தினந்தோறும் எண்ணுகின்ற
தமிழ்ச்சாதியன்றோ
என்சாதி !.....

அதனால்தான்
ஒருவன் அடிபட்டால்
ஒருநூறைப் பலியெடுக்கும்
இவர்கள் உத்வேகம்
எனக்குப் புரியவில்லை..
மடையர்கள் என்று
மனசுக்குள் நினைக்கின்றேன்.
ஆனால் யார் மூடர்?.......

முரட்டுக் கற்பாறை
இவர்கள் உள்ளம்....
இருந்தாலும்.
சுனைகள் ஊற்றுக்கள்

சுரக்கும் இவரிடத்தும்...
கோபம் வரும்போது மிருகங்கள்
மறுபோது.
சாதுக்குழந்தைகள்....
நாமென்றால்
சிங்கத்தைச் சீண்டிவிடும்
சுண்டெலிகள்
ஒருதடவை சீண்டுவதும்
ஓடிப் பதுங்குவதும்
காயம் பட்டவுடன
கதறி முனகுவதும்...
காலம் காலமாய்
தொடர்கின்ற தொடர்கதைதான்..

எம்மனத்தில் ஆழப்
படிந்திருக்கும்சுயநலத்தை
சாதிப்பிரிவுகளை
சீதனத்தின் கொடுமைகளை
ஒழிக்கும் முயற்சியிலே
முதலில்
எம்மைப்பதமிடுவோம்...
அதன்பிறகு
அந்த உயர்வான
எமது இனத்திற்காய்
ஏதும் காரியங்கள்
செய்வதற்கு முயற்சிப்போம்...
நோயின் கிருமிகளே
உடலுள்ளே இருக்கையிலே
பாலும் பழரசமும்
பயனேதும் தந்திடுமோ...?

ஊரில் பிறந்தவனை
ஒதுக்கிவைத்துவிட்டு
உலகை ஆள்வதற்கு
நினைப்பதிலே நியாயமில்லை..
அகர வரிசையதே
ஒழுங்காய்த் தெரியவில்லை
ஐந்தாம் வகுப்பிற்கு
இடம்வேண்டிப்போராட்டம்...

வீரம்மட்டுமன்றி
விவேகமும் வேண்டுமென்று
பாரம்பரியத்தின்
பலகதைள் புகட்டியிடும்
ஊரைக்கவர்வதற்கு
ஏதும் செய்திடலாம்
உருப்படியாய்ச்செய்தால்தான்
உண்மையிலே பலனாகும்

அடிவாங்கப்பிறந்ததே
தமிழ்ச்சாதி என்று
முடிவாகப் பலதடவை
இந்நாட்டுச் சரித்திரத்தில்
நாங்கள் பொறிக்கின்றோம்

அன்று
ஆண்ட பரம்பரையின்
வீரத்தைக் குழிதோண்டிப்
புதைக்கவே வந்த
நவவீரர் நாங்கள்...
தமக்காய்த்தனிவீடு
நகைநட்டு சீதனங்கள்

## இந்நூலாசிரியரைப் பற்றி



சுப்பிரமணியம்
சின்னத்துரை
அரவிந்தன்
(விஷ்வமித்திரன்)

இவர் யாழ்/வடமராட்சி பொலிகண்டியைச் சேர்ந்த சின்னத்துரை - செல்லபாக்கியம் தம்பதிகளுக்கு 1953-10-05 இல் மகனாகப் பிறந்தார். மூத்த சகோதரி சந்திரவதனா, இளையவர் இந்திராணி தந்தையார் திருக்கோணமலையில் வர்த்தகம் செய்தமையால் இவர் ஆரம்பக் கல்வியை திருக் கோணமலையிலேயே கற்றார். உயர்கல்வியை உடுப்பிட்டியில் தொடர்ந்தார்.

இவர் 1973-04-02 இல் உள்ளூராட்சி எழுது வினைஞராக கடமையேற்றார். பின் 1977-04-01இல் பொதுச்சுகாதாரப் பரிசோதகராகவும் 2000-07-17இல் திருக்கோணமலை மாவட்ட மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகராகவும் பதவிமாற்றம் பெற்று பணியைத் தொடர்கிறார்.

பொலிகண்டி கந்தசாமி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மகள் பாமாதேவியை 1987இல் மணம்புரிந்து செந்தூரன், சஞ்சீவன், அபிராமி, அஸ்வினி ஆகியோருக்கு தந்தையானார்.

இவர் தனது பாடசாலைப் பருவத்தில் (8ம் வகுப்பில் 1967) ''இனிமையில் சிறந்தது தமிழ் மொழியாம்'' என்ற கவிதையினூடாக இலக்கியத் துறையில் கால்பதித்தார். ''ராதா ஒரு மெல்லிதழ் ரோஜா'' என்ற இவரது இசையும் கதையும் 1978ல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. 1996/97 இல் ''முகாரியின் பின் ஒரு மோகனம்'' என்ற கவிதை 1981இல் யாழ் மருத்துவ மாதர்சங்க சஞ்சிகையான ''வாழ்வின் வசந்தம்'' என்ற சஞ்சி கையில் முதல்முறையாக வெளிவந்தது. நாவற்கு ழியூர் நடராஜன் நினைவுக் கவிதைப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட ''கண்ணீரில் ஓர் கவிதை'' என்ற கவிதையும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

இவரது இலட்சியம்
''மனித விழுமியங்கள்
எங்கும் மலியப்பார்த்தல்''

- வீணைவேந்தன் -

ISBN 955-1098-03-X